சுத்தத்திற்கும் சுவைக்கும்
புகழ்பெற்ற
சைவ ஹோட்டல்
தேவி விலாஸ்
சுத்தம், சுவை,
அன்பான உபசரிப்பு,
சைவ போசனகாரர்
மனதில் என்றும்
தேவி விலாஸ்
(வண்ணைச் சிவன்கோவில்
சந்தி)
888, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் 8

ஈழநாடு
The EELANAADU
50 சதம்

மலர் 22 | வைகாசி 24 | றஜப் 22 | இதழ் 117
யாழ்ப்பாணம் | வெள்ளிக்கிழமை | 6-6-80

RECEIVED
1980-6-26
PERIODICALS DIVISION
UNIVERSITY OF SRI LANKA ... CAMPUS

சுவை, சுத்தம்,
சுகாதாரத்திற்கு
பெயர்பெற்ற
சைவ ஓட்டல்
சகல வெளிநாட்டு
பிஸ்கட்டுகளுக்கு
அசோக் பவான்
112, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 8095

# கொழும்பு நகரில் இருசம்பவம்

# ஒருவர் பலி; நால்வர் காயம்

## 'விசாரணை நடத்தி தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்'

### கம்பஹா எம்.பிக்கு பிரதமர் பதில்

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளும் இடதுசாரி இயக்கங்களும் அரசுக்கெதிராக நேற்று ஒரு நாள் நாடுமுழுவதும் நடத்திய தேசிய எதிர்ப்புப் போராட்டத்தின் விளைவாகக் கொழும்பு நகரில் இரண்டு இடங்களில் நடந்த அசம்பாவித சம்பவங்களில் ஒருவர் பலியானார். ஒரு பெண் உட்பட நால்வர் காயமடைந்தனர்.

இச்சம்பவங்கள்பற்றி நேற்றைய பாராளுமன்றக் கூட்டத்தில் கம்பஹா பிரதிநிதி திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா பிரஸ்தாபித்தார். இதுபற்றிப் பிரதமர் விடுத்த அறிக்கையில் குற்றமிழைக்கப்பட்டிருந்தால் அரசாங்கம் இதுபற்றி விசாரணை செய்து தகுந்த நடவடிக்கை எடுக்கும்" என்று கூறினார்.

அரசாங்கத்துக்கு ஆதரவாகவும் நேற்று நகரில் அரச அலுவலகங்கள் முன்னிலையில் நண்பகல் இடைவேளையில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. நாட்டில் வன்முறைச் செயல்கள் எதுவும் நடைபெற்றதாகப் புகார் கிடைக்கவில்லையென பொலிஸ்தலைமை அலுவலகம் தெரிவித்தது.

### பாராளுமன்றத்தில்

"மறியல் போராட்டம் நடத்தி தொழிலாளர்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் யாராக இருந்தாலும் குற்றம் இழைக்கப்பட்டிருந்தால் தகுந்த நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயங்காது" என்று பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா பாராளுமன்றத்தில் உறுதியளித்தார்.

நேற்றுப் பாராளுமன்றத்தில் ஒத்திவைப்புப் பிரேரணையின்போது கம்பஹா எம்.பி. திரு எஸ்.டி. பண்டாரநாயகா பேசுகையில், "இன்று நண்பகல் 1-10 மணியளவில் அரச வழங்கல் திணைக்களத்திற்கு முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த திரு டி சோமபாலா என்ற தொழிலாளி கொலைசெய்யப்பட்டிருப்பதாகவும், இரு பாராளுமன்ற உறுப்பினர்களுடன் சென்ற 500 பேர் இவர்கள் மீது கற்களால் வீசியதாலேயே இவர் மரணமானதாகவும் கூறினார்.

இவ்வேளையில் குறுக்கிட்ட பிரதமர்; பாரதூரமான இவ்விடயம் பற்றிக் கூறுவதாலும் இதில் சபை உறுப்பினர்கள் சம்பந்தப்பட்டிருப்பதாலும் தனியான பிரேரணை கொண்டுவந்தே இதனைத் தெரிவிக்க வேண்டுமென்று ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பினார்.

எஸ்.டி. பண்டாரநாயக்கா: எனக்கு முன்னறிவித்தல் கொடுக்க நேரமிருக்கவில்லை. இப்போதுதான் இதுபற்றி அறிந்தேன்.

சபாநாயகர்: பாராளுமன்ற நிரந்தர விதிகளின்படி பிரச்சினை எழுப்பமுடியாது.

பிரதமர்: இந்த அரசாங்கம் மனிதாபிமானத்தின் பெறுமதியையும் மதிப்பையும் நன்கு அறியும்.

சபாநாயகர்: நீங்கள் இது தொடர்பாக பேசமுடியாது. வேண்டுமானால் அறிக்கை சமர்ப்பிக்கலாம்.

பிரதமர் அறிக்கை சமர்ப்பித்து பேசினார். எமது கட்சி உறுப்பினர்கள் எவரும் இச்சம்பவத்தில் ஈடுபட்டதாக நான் அறியவில்லை. இரண்டு உறுப்பினர் என்று கம்பஹா உறுப்பினர் குறிப்பிட்டது அவரும் ஹரிஸ்பத்துவ இரண்டாவது உறுப்பினருமாக இருக்கலாம். குற்றம் இழைக்கப்பட்டிருந்தால் யாராக இருந்தாலும் அரசாங்கம் விசாரணை நடாத்தி தகுந்த நடவடிக்கை எடுக்கும். (ம.கு)

## அரசாங்க அதிபர் பதிலளிக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ் அரசாங்க செயலகத்தில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் திருநெல்வேலியில் பால் சேகரிப்பு நிலையம் நிறுவ வேண்டுமெனப் பாராளுமன்ற உறுப்பினர் எவராவது கேட்டிருந்தார்களா? என நிருபர் கேட்ட கேள்விக்கு அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி பதில் எதுவும் அளிக்கவில்லை.

அரசாங்க அதிபர் எம். பிக்கள் எவரும் கேட்கவில்லை எனக் கூறியதாக "ஈழநாடு" இதழில் வெளியானது தவறானதாகும்.

புங்குடுதீவில் சுமார் 8 லட்சம் ரூபா செலவில் நிறவப்படும் நுண்கலை நெசவு நிலையம், 17 நாட்களில் பூர்த்தியாகுமென்றும், இம்மாதம் 2ம் தேதி அடிக்கல் நாட்டப்பட்டதாகவும், 19ம் திகதி திறப்புவிழா நடைபெறுமென்றும் அரசாங்க அதிபர் இம்மாநாட்டில் கூறினார். (ஏ)

## யாழ். செயலகத்தில்

## 90 வீதமான ஊழியர்கள் அரைமணி நேரம் மறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்திற்கு முன்னால், கச்சேரியில் கடமையாற்றும் சுமார் 90 வீதமான ஊழியர் நேற்று இடைவேளையில் நண்பகல் 12 மணிமுதல் 12-30 மணிவரை சுலோக அட்டைகளுடன் மறியல் செய்தார்கள்.

அரசாங்க லிகிதர் சேவை சங்கம் அரசாங்க பொதுச் சேவைத் தொழிலாளர் சங்கம் அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் ஆகியவற்றைச்சேர்ந்த ஊழியர்கள் கறுப்புப்பட்டி அணிந்து கச்சேரியில் கடமையாற்றிக்கொண்டிருந்தனர்.

### கறுப்புக்கொடிகள் அகற்றப்பட்டன

அரசாங்க லிகிதர் சேவைச் சங்கம், அரசாங்க பொதுச் சேவை தொழிலாளர் சங்க காரியாலயங்களில் நேற்றுக்

8-ம் பக்கம் பார்க்க

### யாழ்ப்பாணத்தில் அமைதியான

# தேசிய எதிர்ப்புநடவடிக்கை

## மட்டக்களப்பில் எதுவித மாறுதலும் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று அமைதியான முறையில் தேசிய எதிர்ப்புத்தினம் அனுஷ்டிக்கப்பட்டது. நகரின் பெரியகடைப் பகுதியில் கடைகள் பூட்டப்பட்டிருந்தன. சில கடைகள் ஒற்றைக்கதவு திறந்து வியாபாரம் நடைபெற்றது. மூன்று தனியார் வேலைத்தலங்களில் வேலைநிறுத்தம் நடைபெற்றது. பாடசாலைகளில மாணவர் வரவு குறைவாக இருந்தது. சில இடங்களில் கறுப்புக்கொடி காணப்பட்டன. கச்சேரியிலும் மற்றும் அலுவலகங்களிலும் நண்பகலில் அமைதியான முறையில் அலுவலக வளவுக்குள் மறியல் நடைபெற்றன.

### மட்டக்களப்பில்

மட்டக்களப்பில் தேசிய எதிர்ப்புத்தினமாக எந்த நடவடிக்கையும் இருக்கவில்லை. வழமைபோல் அலுவலகங்களில் வேலை நடந்தன. பாடசாலைகள் வழமைபோல் இயங்கின. கடைகள் வழமைபோல் திறந்து வியாபாரம் நடந்தது.

தேசிய எதிர்ப்புத் தினத்தையொட்டி நேற்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைச் செயலகம், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் செயலகம், இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சி வடபிரதேசச் செயலகம், தமிழ் இளைஞர் பேரவை தலைமைச் செயலகம் ஆகிய இடங்களில் கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டிருந்தன.

யாழ். மாநகரசபை மின்சாரச்சபைக் காரியாலயத்தில ஊழியர்களால் கட்டப்பட்டிருந்த கறுப்புக்கொடி [illegible] சார் அப்புறப்படுத்தினர்.

### கடையடைப்பு

யாழ்நகரில் அநேகமான வர்த்தக நிறுவனங்கள் கடையடைப்புச்செய்தன. சாப்பாட்டுக் கடைகள் ஒற்றைக் கதவில் திறந்திருந்தன. நகரின் பிரதான வீதிகளில் மக்கள் நடமாட்டம் குறைவாகவிருந்ததால் கதவடைப்புச் செய்யாத வர்த்தக நிறுவனங்களும் [illegible] கதவடைப்புச் செய்தன. [illegible] வரவு கணிசமாகக் குறைந்திருந்தது

### சட்டவிரோதமாக ஊர்வலம்

யாழ் கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த நூற்றுக்குமதிகமான ஊழியர்கள் நேற்று நண்பகல் சட்டவிரோதமாக ஊர்வலமொன்றை நடத்தினர்.

இவர்களின் ஊர்வலத்தைப் பொலிசார் தடைசெய்ய முற்பட்டபோதும் ஊழியர்கள் [illegible] ஊர்வலத்தை நடத்தி

(4ம் பக்கம் பார்க்க)

## வித்தியாதிபதி மறுப்பு

(யாழ்ப்பாணம்)

ஒரு வாரத்தில் இடமாற்றம் பெற்றுச்செல்ல யாழ் மத்திய கல்லூரி அதிபர் சம்மதித்துள்ளதாக உண்ணாவிரதமிருந்த மாணவர் மத்தியில் வடமாநிலக் கல்வி அதிபர் திரு. ரீ. மாணிக்கவாசகர் பேசுகையில் கூறியதாக 'ஈழநாடு' இதழில் வெளியான செய்தி தவறானதென்றும் தான் அப்படிப் பேசவில்லையென்றும் வடமாநில கல்வி அதிபர் திரு ரீ. மாணிக்கவாசகர் நேற்று தெரிவித்தார்.

யாழ் மத்திய கல்லூரி பிரச்சினை தொடர்பாக இன்னும் எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

நாளைக் காலை யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் பெற்றோர்கள் மாநாடொன்றை கூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

இறைண்டிங் மில் வேலை தெரிந்தவர்கள் உடன் தேவை. தேவாஸ் இறைண்டிங் மில், 159/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 5943

### விற்பனைக்கு

34ஸ்ரீ தொடர் இலக்கமுள்ள மொறிஸ் மூக்கன் லொறி விற்பனைக்குண்டு S. இலங்கநாதன் J. P., மணற்குடியிருப்பு, முல்லைத்தீவு. 5942

கோப்பாய் தெற்கில் 6½ பரப்புடன் கூடியகல் வீடு சகலவசதியுடன் விற்பனைக்குண்டு கடித மூலம் தொடர்பு கொள்க. விளம்பர இல: 5957, C/o, ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 5957

### பயிற்சி

அரிய சந்தர்ப்பம்! உடன் நேரில் தொடர்பு கொள்ளவும் முன் அனுபவம் சிறிதும் தேவையில்லை. அனைவரும் விண்ணப்பிக்கலாம். றேடியோ - டெலிவிஷன் மூன்று மாத டிப்பிளோமா பயிற்சி - ஏயர் கொண்டிசனிங் (Air - Conditioning & Refrigeration) மூன்று மாத டிப்பிளோமா பயிற்சி, வெல்டிங் டிப்பிளோமாப் பயிற்சி ஆரம்பம் 9-6-80. நாஷனல் அக்கடமி, 11, மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். சகல நாட்களிலும் திறந்திருக்கும். 5945

### கல்வி

டிசம்பர், 80-ம் ஆண்டு நடைபெறஇருக்கும் லண்டன் IAB IAA பரீட்சைக்குரிய புதிய வகுப்புகளும், பிறமன் பரீட்சைக்குரிய வகுப்புகளும் உடனே ஆரம்பமாகின்றன ஸ்ரீமீனாட்சி கமர்ஷல் கல்லூரி, 55, சினிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 5955

## ஆங்கில வகுப்புகள்

**றிம்மர் மண்டபம், யாழ்ப்பாணம்.**

ஆங்கிலப் பேசுப் பயிற்சி (Spoken English) ஆங்கில வகுப்புகள் அனுபவமிக்க ஆசிரியர்களால் ஜூன் 16ந் திகதி திங்கள் முதல் நடாத்தப்படும். பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

விசாரணைகட்கு

**செல்வி எம். தம்பையா**
றிம்மர் மண்டபம்,
வேம்படி றோட்,
யாழ்ப்பாணம். 5956

## அராலியில் சங்காபிஷேகமும் அன்னதானமும்

(அராலி)

அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த சங்காபிஷேகம் அடுத்த திங்கட்கிழமை நடைபெற இருக்கின்றது. அத்தினம் காலை அம்பாளுக்கு நாவேத்திர சகஸ்ர சங்காபிஷேகமும், பகல் அன்னதானமும் இடம்பெறும். இரவு யாழ்ப்பாணம் இசையாளர்சங்க ஆதரவில் அகில இலங்கை இந்திய புகழ்நாதஸ்வர தவில் வித்துவான்களின் நாதஸ்வரக் கச்சேரியும் அதனைத் தொடர்ந்து ராஜகிருஷ்ணனின் சோலாக கச்சேரியும் நடைபெறும். அதற்கடுத்து அதி விசேஷ நிகழ்ச்சியாக தமிழகத்தைச் சேர்ந்த திரைப்படப்புகழ் பின்னணிப் பாடகர்கள் சாயல்குடி எஸ் வி பொன்னுசாமி, கோவை வசந்தா குழுவினரின் மெல்லிசை விருந்து இடம்பெறும்.

---

**கொக்குவில் இந்துக் கல்லூரி**
**பரிசளிப்பு விழா 1980**
காலம்: 7-6-1980 சனிக்கிழமை பி. ப. 4-30மணி
இடம்: கல்லூரி மண்டபம்.
பிரதம விருந்தினர்;
**திரு. எம். சிவசிதம்பரம் அவர்கள்**
பா. உ. — நல்லூர்
தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.
5959 அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்

---

# PERCIVAL HALL

விரிவுரையாளர்களால் தயாரிக்கப்பெற்ற

**I C M A May 1980**

பரீட்சை வினாக்கட்கு விடைகள்

**I A A December 1979**

பரீட்சை வினாக்கட்கு விடைகள்

**பூபாலசிங்கம் புத்தகசாலையிலும்**

இதர புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

5940

---

## தேவை

பிரபல ரேடியோ ரி. வி. விற்பனை ஸ்தாபனத்திற்கு கணக்கியல், ஆங்கிலம் முதலியவற்றில் அறிவுள்ள நிருவாக முகாமையாளர் உடனடியாகத் தேவை. வயது 35-50க்கு உட்பட்டவர் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் நிர்ணயிக்கலாம். விண்ணப்பப்பத்திரத்தை சொந்தக் கையெழுத்தில் எழுதி, முன்அனுபவம், நற்சாட்சிப்பத்திரம், பிறப்புச் சாட்சிப்பத்திரம் முதலியவற்றுடன் இணைத்து 12 6 80முன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல: 0389
C/O, ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம்.

---

## யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம

(ரத்தவர்) உடுவிபுரம் கந்தப்பிள்ளை புத்தூர் மேற்கு. — வழக்காளி

சங்கப்பிள்ளை நவரத்தினராசவேல். புத்தூர் கிழக்கு. — பதில் வழக்காளி

வழக்கு இல: காசு சு. 4512

விரோதமாக

(1) கந்தையா முத்துத்தம்பியும்,
(2) பெண் விஜயலட்சுமியும், இருவரும் நீர்வேலி வடக்கு. — எதிராளிகள்

மேற்சொல்லப்பட்ட எதிராளிகளிடமிருந்து ரூபா 9360/உம் 25-9-1970 தொடக்கம் முழுப்பணமும் செலுத்தும் வரை சட்டவட்டியும் ஆறுல் வட்டி முதல்தொகை ரூபா 6000/-க்கும் கூடுதலாக தீர்வைத் திகதிக்குவரையும் அறவிடக் கூடாது. அத்துடன் வழக்குச்செலவு ரூபா 1393-12 சதமும் அறவாக்குவதற்காக கீழே விபரிக்கப்படும் ஆதனங்களின் சகல உரித்துக்களையும் 1980-ம் ஆண்டு ஆடிமாதம் 4-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்கு 2-ம் ஆதனத்தையும் பிற்பகல் 2-00 மணிக்கு 1-ம் ஆதனத்தையும் சொல்லப்பட்ட ஆதனங்களில் இருந்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என இத்தால் அறிவிக்கிறேன். (பிஸ்கால் செலவும் பவுண்டேச்சும் அறவாக்கப்படும்)

### விற்பனை செய்யப்படும் ஆதனங்கள்

[1] வடமாகாணம் யாழ்ப்பாணம், டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று சிதாரி 2-ம் டிவிசன் இறை "மலவாபங்கசாலை" என்றழைக்கப்படும் காணி குளி 17 34/39ல் கட்டப்பட்ட கடை அறைகள் மூன்றில் கிழக்குப்பக்கமாக அறைநீளம் அடி 50 அகலம் அடி 21. இதற்கு எல்லை கிழக்குப்பக்கமாக சி. ச. சு. நமசிவாயம் செட்டியாருக்குரிய ஆதனம், டெக்கு றோட்டு. மேற்கு: இதன் மிகுதிக்காணி பி கு. நாகப்பச்செட்டியாருக்குரிய ஆதனம் இவ்வெல்லைக்குட்பட்ட கடை அறையும் மிகுதிக் காணியில் இருக்கும் கிணற்றிலும் கக்கூசிலும் பாவிப்புரித்தும் வழியுரித்தும் இதன் பதிவு: பூ எ: பு 228/258.

(2) வடமாகாணம் யாழ்ப்பாணம், டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி, கோப்பாய் கோவிற்பற்று "மறுகலாவத்தை" (மங்களாவத்தை) தோட்டம் நி. ப. 4 எல்லை கிழக்கு: கனகசபை கைப்பெண் வள்ளிப்பிள்ளையின் தனம் வடக்கு றோட்டு மேற்கு இராமநாதர் கதிரவேலுவுக்கும் மகன் தம்பிராசாவுக்கும் உரிய ஆதனம் தெற்கு கப்பர் கைம்பெண் சின்னச்சியின் ஆதனம். இதடங்கலும் தெற்கெல்லைக் காணியின் மேற்குக்கத்திலிருக்கும் கிணற்றில் தண்ணீர் எடுக்கும் வழமையான உரிமையாய்க்கால் பாவிப்புரித்தும் இக்காணி சுட்டுக்கடனின் இருக்கின்றது. இதன் பதிவு இலக்கம்: ஜே 134/287

கா. மகேந்திரராசா,
பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.
04-06-80.

5952

---

# வனசிங்காவுக்கு இடமாற்ற உத்தரவு இன்னும் கிடைக்கவில்லை

(மட்டக்களப்பு)

இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத்தின் தலைவர்திரு டி. எஸ் கே. வனசிங்காவுக்கு ஏழும் பின்இருந்து இது வரை இடமாற்ற உத்தரவு கிடைக்கவில்லை. இவரின் இடமாற்றம் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் திரு ஏ. அமிர்தலிங்கம் பல தடவை பாராளுமன்றத்திலும், கல்வி அமைச்சரிடமும் சுட்டிக்காட்டினார் கல்விச்சேவை ஆணைக்குழுவினரிடமும் பிரஸ்தாபித்ததுடன் அண்மையில் ஜனாதிபதி திரு.ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவிடமும் இது பற்றிப் பிரஸ்தாபித்திருந்தார் ஜனாதிபதி இடமாற்றத்தை ரத்து செய்து மீண்டும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு அனுப்பிவைப்பதாக அறிவித்திருந்தார்.

ஆனால் மட்டக்களப்புக் கல்வி இம்காரிடம் இது பற்றி விசாரித்த போது இதுவரை இடமாற்றம் சம்பந்தமான எவ்வித கட்டளையும் கிடைக்கவில்லை என தெரிவித்தனர். (அ)

---

**சுயபாஷா பெண் பட்டதாரிகள் (தமிழ்)**

**பதிவேடு**

தொழிலற்றிருக்கும் சகல சுயபாஷா (தமிழ்) பட்டதாரி பெண்களின் பதிவேடு ஒன்றினைத் தயாரிக்க இலங்கைப் பல்கலைக்கழக பெண்கள் சம்மேளனம் விரும்புகின்றது. ஆங்கில வகுப்புக்களை நடத்துவதற்காகவும் உத்தியோக வாய்ப்புக்களைக் கண்டறிவதற்கும் இப்பெயர்கள் அவசரமாகத் தேவைப்படுகின்றன. வருடம், பாடங்கள், பல்கலைக்கழகம், உங்கள் முகவரி, பட்டப்படிப்பு சம்பந்தமான சகல விபரங்களையும் கீழே ஒப்பமிட்டுள்ளவருக்கு ஜூன் 16-ந் திகதிக்கு முன் அனுப்புக.

செல்வி எம். தம்பையா,
தலைவர்,
S F F U W,
(யாழ் கிளை)
இல: 28, லாலி றோட்,
கோண்டாவில்
5958

---

## இன்று நினைவு தினம்

(கொழும்பு)

கடந்த வருடம் ஜூன்மாதம் 10 ம் திகதி பேதுறுகாலமலை உச்சியில் தனது கடமையில் இருக்கும்போது திடீர் மரணம் எய்திய திரு டேவிட் புவேல்லின் ஒரு வருட பூர்த்திநினைவு கூறும் முகமாக அவர் 20 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்த கொழும்புதியகமத்திய ஒலிபரப்பு நிலையத்தில் அங்கு கடமையாற்றும் சகல ஊழியர்களும் கலந்து கொள்ளும் பிரித் வைபவம் இடம்பெறுகிறது. நாளை அன்னதானமும் வழங்கப்படும்.

யாழ்ப்பாணம், அம்பாறை வரவட்டங்களில் இயங்கிக் கொண்டிருக்கும் மத்திய அலை ஒலிபரப்பு நிலையங்களுக்கும் காரணகர்த்தாவாக திரு புவல்தான் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது அத்துடன் இவரது ஆலோசனையுடன் யாழ்ப்பாணத் திட்டமிடப்பட்ட ஸ்ருடியோவின் வேலைகள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

## பிரியாவிடை

[வவுனியா]

கடந்த பதினைந்து வருடகாலமாக மலேரியா தடுப்புப் பகுதி வெளிக்கள உதவியாளராகக் கடமையாற்றி பதவி உயர்வுபெற்று வவுனியா சுகாதார அத்தியட்சகர் காரியாலயத்தில் கடமையாற்றிய திரு. சி. சிவபாலன் அண்மையில் தாதிகள் பயிற்சிக் கல்லூரிக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளார். சக ஊழியர்களும் பொதுமக்களும் இவருக்குப் பிரியாவிடை அளித்தனர். (உ)

---

# பதவி வெற்றிடங்கள்

யாழ். மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் கீழ் குறிப்பிடும் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்களை கோருகின்றது.

1. **உதவிப் பொதுமுகாமையாளர்**
   சம்பள அளவுத்திட்டம் 750 — 1150 (40 × 10)
2. **அலுவலக உதவியாளர் தரம் 2**
   சம்பள அளவுத் திட்டம் 500 — 825 (20×10 25×5)
3. **கணக்குப் பதிவாளர் தரம் 1**
   சம்பள அளவுத் திட்டம் 400 — 650 (15 X 10 — 20 X 5)
4. **கட்டிட மேற்பார்வையாளர்**
   சம்பள அளவுத் திட்டம் 300 — 485 (12 50X10 15 00X4)

(மற்றும் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவினால் பொரிசு செய்யப்பட்டபடிகளும் வழங்கப்படும்

**விண்ணப்ப முடிவுத் திகதி 21-06-1980**

மேற்காண் பதவிகளுக்குரிய கல்வித்தகைமைகள், வேறும் தகைமைகள், வயதெல்லை போன்ற சகல விபரங்களும் தேவைப்படுவோர் சங்கத்தின் தலைமைக்காரியாலயத்தில் நேரடியாகவோ அல்லது போதிய முத்திரையிடப்பட்ட சுயவிலாசமிடப்பட்ட தபால் உறையை கீழ்காண் முகவரிக்கு அனுப்பியோ பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்,
யாழ். மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்,
10/1, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
6-6-1980. 5946

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

இவ்வுலகம் ஒரு சத்திரம், தர்மசாலை இது உனது சொந்த ஸ்தாபனமன்று உனது பூர்வீக இருப்பிடம் பரம்தர்மம். எனவே அதை நோக்கிச் செல்.

— சுவாமி சிவானந்தா

# கம்பர் கவிச்சக்கரவர்த்தி

## வித்துவசிரோமணி உரைச்சக்கரவர்த்தி

— பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

(கடந்த ஞாயிறன்று யாழ் இந்துக்கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்ற இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி கணபதிப்பிள்ளை அவர்களின் கம்பராமாயணக் காட்சிகள் நூல் வெளியீட்டு விழாவில் பண்டிதமணி அவர்கள் நிகழ்த்திய பதிலுரை இங்கு தரப்படுகின்றது)

நான் இளமையிற் படித்த கம்பராமாயணத்தின் பொருள் வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை பிள்ளை கம்பராமாயண மயமாயே இருந்தார். பின்னை நாவலர் பெருமானுக்கு மருகர் மாணாக்கர்

வித்துவசிரோமணியின் சாதுரியத்தைத் தொடக்கி வைத்தவர்கள் இராமநாத அருணாசல மான்மியங்கள் பாடிய திரு பொன்னம்பல உபாத்தியாயர் அவர்கள்.

உள்ளங்காலிலிருந்து உச்சிவரை நவரச தவத்தின கிரீடம் பிரகாசிக்கச் சிரோமணி முகச் சரித்திரத்தைத் தேனெயின் சொல்லி வைத்தவர்கள் சிரோமணியின் மைத்துனரும் நாவலர் பெருமானின் தமையனார் குமாரரும் எனக்கு ஆசிரியருமான மானேஜர் ஸ்ரீமத் த கைலாசபிள்ளை அவர்கள்.

கம்பர் கவிச்சக்கரவர்த்தி சிரோமணி உரைச்சக்கரவர்த்தி வித்துவான்கள் கடும் பாட்டுக்களை சிரோமணி முன்னிலையில் நிவேதித்து பொருள் கேட்டுநிற்பது சாதாரண வழக்கம். பொருள்கேட்ட வித்துவான்கள் வெறுங்கையோடு திரும்பிய சரித்திரம் கிடையாது. வித்தவமதுகரங்கள் சிரோமணியை மொய்த்துக் கொண்டே இருக்கும்.

தெருவிலும் தெருத்திண்ணைகளிலும் குளக்கரையிலும் கோயிலிலும் மற்றும் இடங்களிலும் சிரோமணி நடத்திய கம்பராமாயணக் காட்சிகளை விரிக்கின் அது ஒரு பெரும் பாரதமாய் விடும்.

சிரோமணியின் கம்பராமாயண வியாக்கியான மகாபாரதத்தில் ஒருசிறுதுளி பின் வருமாறு

சிரோமணியின் கம்பராமாயண வகுப்பொன்றை எடுத்துக் கொள்ளுவோம்.

பல ஊர்களிலுமிருந்து வளர்ந்த மாணவர்கள் வந்து குழுமுவார்கள்.

அவர்களைச் சூழ்ந்து பெருங்கூட்டம் கூடியிருக்கும் ஒரு பகுதியினர் கடன் கொடுத்தவர்கள் கொடுத்த கடனைப் பெறுதற்குச் சமயம் பார்த்திருப்பவர்கள் அவர்கள். மற்றொரு பகுதியார் கலைஞர்கள் தமது கலா விநோதங்களைக் காட்டிச் சிரோமணியின் கையால் பரிசில் பெற வந்திருப்பவர்கள் அவர்கள் மற்றொரு பகுதியாரவர் கன்னிகையைக் கரை சேர்ப்பதற்குப் பணம் பெற வந்திருப்பவர்கள்



கற்பகதருப் போல சிரோமணி அவர்கள் வீற்றிருப்பார்கள்

சிரோமணியின் விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்குப் பெரும் பெரும் வியாபாரிகள் இடையிடையே வந்து ஆயத்தமாயிருப்பார்கள் அவர்கள் கற்பகதருவின் கொம்பர்கள்

இந்த நிலையில் கம்பராமாயண ரசனை ஊற்றெடுத்துப் பிரவாகிக்கும் வகுப்பைச் சூழ்ந்திருப்பவர்கள் பெரும்பாலும் வந்த கருமத்தை மறந்து விடுவார்கள்.

ஒருமனிதர் பத்து வருடத்துக்கு மேல் கொடுத்த கடனைப் பெறுபவர் நாளைக்கு நாளைக்கு என்று சிரோமணியிடம் தவணையில் திருப்பியுற்றுச் செல்பவர் அவர்.

திடீரென்று சிரோமணி மறைந்ததும் கொடுத்த கடனை நினைந்து தவித்தார் அந்த மனிதர் அவர் தவிப்பைக் கண்ட சிரோமணியின் மைத்துனரான ஸ்ரீமத் த கை அவர்கள் தாம் அப்பணத்தைத் தருவார் என்று கூறி அந்த மனிதரைத் தேற்றினார். பணந்தரும் தேதியையும் குறிப்பிட்டார். அந்தத் தேதி கடைவாடகை அறவிடுந் தேதி அன்று அந்த மனிதர் வந்து சேர்ந்தார். அன்று அறவிட முடியவில்லை அதனால் அடுத்த நாள் வரும்படி அதி விநயத்துடன் கேட்டார் மனிதருக்குக் கோபம் வந்து விட்டது. இப்படி அலைகழிக்கலாமா? என்று ஏசியும் விட்டார்.

ஏச்சைக் கேட்டு அந்தமனிதரின் கோபத்துக்கு ஆளாயினார்கள் த. கை. அவர்கள்

தம் வாய் கம்பராமாயண வாய் அல்லவே என்று தமக்குத் தாமே சமாதானஞ் செய்து கொண்டார்.

பத்து வருடத்துக்கு மேல் நாளைக்கு நாளைக்கு என்ற தவணையை சிரோமணியின் கம்பராமாயண வாயால் கேட்டுத் திருப்தி எய்திய அந்தமனிதர் தா ஒரே ஒரு தவணை கேட்டதற்கு அதுவும் தாம் வாங்காத கடனைக் கொடுக்க முன் வந்ததற்கு கோபித்ததும் நியாயம் தான்! தாம் கம்பராமாயண வாயால் தவணை இடவில்லையே யென்று சொல்லிச் சொல்லி வியக்க வைப்பார்கள் த கை அவர்கள் இக்கதையை அவர்களிடம் நான் பல முறை கேட்டதுண்டு

அந்த மனிதருக்கு அன்று கோபம் வந்ததை நிற்க எவ்வாறெய கோபமும் சிரோமணியை அணுகுவதில்லை அணுகி அறியாது

ஆனால், ஒரு மாணவன் இந்தத் தொடர்க்குப் பொருள் இவ்வாறு முன்னமே சொன்னது ஞாபகம். இப்பொழுது சொல்வது வேறுவிதமாயிருக்கிறது என்றானபின், அணுகியறியாத கோபம் சிரோமணியின் முகத்தில் தவழுவதைக் காணலாம்.

'விருந்து' என்பதை வனப்புக்களில் ஒன்று புதுமை என்பது பொருள். சிரோமணியின் கம்பராமாயண வியாக்கியானத்தில் விருந்து குதிகொண்டு நடனமிடும். புதிது புதிதான கருத்துக்கள் ஊற்றெடுத்துக் கொண்டேயிருக்கும்.

கம்பர், தாம் கருதாத கருத்துக்களையும் சிரோமணியின் வாயிலிருந்து வரக் கேட்பாராயின், சிரக்கம்பஞ்செய்து ஆசீர்வதிப்பர்.

நான் பிறப்பதற்கு ஒரு வருடம் முந்திச் சிரோமணி மறைந்துவிட்டார் அவர் மீது கொண்ட ஆராமையும் அப்பொழுதைய சந்தர்ப்ப விசேடமுமே கம்பராமாயணக் காட்சிகள் தோன்றுவதற்கு மூலகாரணங்கள்.

காட்சிகள் புத்தகவடிவில் வருமென்று கனவிலேதானும் நினைத்ததில்லை

"நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்

எனைபாளும் ஈசன் செயல், என்ற அன்னையின் வாக்கை நினைவு கூரும் வகையிலே, முத்தமிழ் வெளியீட்டுக்கழகம் செயலாற்றியிருக்கின்றது. முதற்பகுதியை வெளியிட்டிருக்கின்றது.

என்னைப் பொறுத்தவரையில் மன்றத்தின் செயல் செயற்கரிய செயல்; நன்றி கூறுதலில் அடங்காதசெயல்.

## மக்கள் கருத்து

### தந்தை தரும் விளக்கம்

2-6-80 "ஈழநாடு" பத்திரிகையில் முதல் பக்கத்தில் "மத்திய கல்லூரி விவகாரம்—நிர்வாகம் விளக்கம்" என்ற தலைப்பில் வெளியான செய்தி எனது கவனத்தை ஈர்த்தது. இச் செய்தியின் பிற்பகுதியில் எனது மகன் சம்பந்தப்பட்ட ஒரு விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது அதாவது, பாங்கொக் நகர் செல்லவிருக்கும் அகில இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்டத் தெரிவுக் குழுவில் யாழ் மத்திய கல்லூரியிலிருந்து தெரிவுபட்ட மாணவன் சம்பந்தமானது. இது பற்றி தங்களுக்கு எமது நிலையை தெளிவுபடுத்த வேண்டியது எமது கடமை என்று கருதியதால் இதை எழுதுகிறேன்

ஏப்ரல் மாத முற்பகுதியில் அகில இலங்கை பாடசாலைகளின் உதைபந்தாட்டத் தெரிவுக் குழுவொன்றைத் தேர்ந்து ஜூன் மாதம் 14ந் திகதி பாங்கொக் நகரில் நடைபெறும் ஆசிய இளைஞர் சுற்றுப் போட்டிக்கு அனுப்புவதற்கான பூர்வாங்க பயிற்சிக்கு கல்லூரிகளிலிருந்து மாணவர்களைத் தேர்ந்து அனுப்புமாறு ஒரு சுற்றுநிருபம் அகில இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கத்தினால் சகல முன்னணிக் கல்லூரிகளுக்கும் அனுப்பப்பட்டது. அதில் யாழ் மத்திய கல்லூரியும் ஒன்று அந்த விளையாட்டுத் துறையில் ஆர்வமுள்ள ஓர் ஆசிரியரின் முயற்சியினால் எனது மகன் பேரம்பிரகாசதனும் இன்னும் 3 மாணவர்களும் பூர்வாங்க பயிற்சிக்கு கொழும்புக்குச் சென்றார்கள். 300 க்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்ட இப்பயிற்சியில் யாழ். மாவட்டத்திலிருந்து தெரியப்பட்ட 3 மாணவர்களில் (யாழ் மத்திய கல்லூரி, இளவாலை புனித ஹென்றீஸ் கல்லூரி, காரைநகர் இந்துக் கல்லூரி) எனது மகனும் ஒருவன் இப்பயிற்சியில் மொத்தம் 37 பேர்கள் தெரியப்பட்டனர். இரண்டாவது கட்டப் பயிற்சியில் இந்த 37 பேர்களும் 23 ஆகக் குறைக்கப்பட்டனர். அதில் எனது மகனும் இளவாலை ஹென்றீஸ் கல்லூரி மாணவனும் தெரியப்பட்டனர். காரைநகர் பையன் நீக்கப்பட்டார். அதன் பின்னர் 28-4-80 ல் எனது மகனுக்கு ஓர் கடிதம் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கத்திடமிருந்து வந்தது அதில் எனது மகன் பாங்கொக் செல்லும் குழுவில் தெரியப்பட்டுள்ளதாகவும் பயிற்சிக்கு வருமாறும் தெரிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன் எனது மகன் தெரியப்பட்டதற்கு வாழ்த்தும் கூறப்பட்டிருந்தது. அதுவரை அவன் ஒவ்வொரு வாரமும் பயிற்சிக்காக கொழும்பு சென்று வந்து கொண்டிருந்தான். தொடர்ந்தும் சென்று வரவேண்டியிருந்ததாலும் அவனுடைய பிரயாணச் செலவுகளை என்னால் சமாளிக்க முடியாதிருந்ததனாலும் நான் யாழ் மத்திய கல்லூரி அதிபரை இரண்டு தடவைகள் சந்தித்து பிரயாணச் செலவுக்கு உதவி புரியும்படி கோரினேன் அதற்கு அவர் செலவுகள் பற்றி தனக்கு எதுவித கடிதமும் வரவில்லையென்றும் இருந்தாலும் எனது மகன் எந்தெந்த நாட்களில் பயிற்சியில் பங்கு கொண்டார் என்பதற்கான ஒரு அத்தாட்சிக் கடிதம் அ. இ. பா. உ. சங்கத்திடமிருந்து கொண்டுவந்தால் அதுபற்றி யோசிக்கலாம் என்றும் கூறினர். அத்துடன் பாங்கொக் பிரயாணத்துக்கான செலவைப்பற்றிநான் குறிப்பிட்டபோது "நாங்கள் அவர்களுக்கு பையனைக் கொடுக்கிறோம். செலவையும் நாமேன் பொறுக்கவேண்டும்" அவர்களல்லா பொறுக்கவேண்டும் என்றார். இது எனக்கு நம்பிக்கை ஊட்டுவதாயிருக்கவில்லை. அந்த வாரம் எனது மகன் மகன் பயிற்சியிலிருந்து திரும்பும்போது அதிபர் கேட்ட அத்தாட்சிக் கடிதத்துடன் வந்தார். அதே வாரம் கொழும்பில் பாங்கொக் செல்லும் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கும் மாணவர்களின் கல்லூரி அதிபர்களுக்கு ஒரு மாநாடு நடந்தது. அம்மாநாட்டிக்கு யாழ். மத்திய கல்லூரி அதிபரும் சென்றிருந்தார். எனது மகன் 19 5-80 காலை பயிற்சியால் திரும்பி வந்து கல்லூரிக்குச் சென்றபோது அதிபர் அவனை அழைத்து "நீ பாங்கொக் குழுவில் தெரியப்படவில்லைப்போல் தெரிகிறது" என்று கூறியுள்ளார். மகன் என்னிடம் இதைக் கூறிய போது எனக்கு ஆச்சரியமாயிருந்தது. ஏனெனில் அதிபரின் கூற்று ஏற்கனவே 28-4-80-ல் எமக்குக் கிடைத்த கடிதத்துக்கு முரண்பாடாக இருந்தது அத்துடன் அந்த வாரம் எனது மகனுக்கு 8 தடவைகள் கொழும்பு சென்று வந்த பிரயாணச் செலவாக முதலில் ரூபா 86-00 ம் பின்னர் ரூபா 312-00 ம் மொத்தம் ரூபா 398-00 வழங்கப்பட்டது.


எனது மகனின் தெரிவுபற்றி அதிபர் கிளப்பிய சந்தேகத்தின்மீது எனக்கு பலத்த சந்தேகம் ஏற்பட்டது.

உடனே நான் இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்க செயலாளருக்கு ஒரு கடிதம் எழுதினேன். அதில் அவர் முதலில் அனுப்பிய தெரிவுக் கடிதம்பற்றிக் குறிப்பிட்டு அதிபர் கிளப்பிய சந்தேகத்தையும் குறிப்பிட்டு விளக்கம் கேட்டிருந்தேன். அதற்கு செயலாளரிடமிருந்து வந்த பதில் முன்னர் அவர் அனுப்பிய தெரிவுக் கடிதத்துக்கு முரண்பாடாக இருந்தது. 23 5-80 திகதியிட்ட செயலாளரின் பதிலில் எனது மகனின் நிலைபற்றிய இறுதி முடிவு இரண்டொரு தினங்களில் தெரிவிக்கப்படும் என்றிருந்தது. அதைத் தொடர்ந்து 26 5-80 திகதியிட்டு வந்த கடிதத்தில் எனது மகன் பாங்கொக் செல்லும் 17 பேர் அடங்கிய குழுவில் இடம் பெறவில்லை என்றும் 4 பதில் வீரர்களில் (Stand Bye) ஒருவராக வைக்கப்பட்டுள்ளார் என்றும் இருந்தது. இ. பா. உ சங்கத்தின் முன்னைய முடிவும் அதிபர் கொழும்பு சென்று வந்தபின் அவர்கள் தெரிவித்த பின்னைய முடிவிலுள்ள முரண்பாட்டையும் நோக்கும்போது அவர் மீது ஐயம்கொள்ள இடமுண்டு.

எனது மகனின் தெரிவுபற்றி 28-4-80-ல் எமக்குக் கிடைத்த கடிதத்தைத் தொடர்ந்து 4-5-80ல் யாழ்.மத்திய கல்லூரிக்கும் ஒரு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதில் எனது மகன் தெரிவுபற்றியும் கல்லூரியும் செலவின் ஓர் பங்கைப் பொறுப்பேற்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதாம். ஆரம்பத்தில் கல்லூரி பகிஷ்கரிப்பின்போது நடந்த ஓர் மாநாட்டில் இக்கடிதம்பற்றி மறுத்துரைத்த அதிபர் அதன்பின்னர் 2 6-80 ல் நடைபெற்ற ஒரு சமரச மாநாட்டி இக்கடிதம்பற்றி ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால் இதுவரை அக்கடிதத்தை யாழ் நாடாளுமன்ற உறுப்பினருக்கோ வடமாநில கல்விப் பணிப்பாளருக்கோ மற்றும் சமரச மாநாடுகளில் கலந்துகொண்ட மற்றும் எந்த பிரமுகர்களுக்கோ காட்டவில்லை. நிலைமை இப்படியிருக்க 2-6-80 ஈழநாடு பத்திரிகையில் வெளிவந்த செய்தியில் "இது தொடர்பாக இதற்குப் பொறுப்பான உதைபந்தாட்டச் சங்கம் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு கல்லூரிக்கும் இதுபற்றி அறிவிப்பதெனவும் உறுதியளித்திருந்தது. ஆனால் இதுவரை அதிபருக்கு தெரிவுகள் பற்றித் தெரிவிக்கப்படவில்லை" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அ. வேதநாயகம்
யாழ்ப்பாணம்.

## சைவமாநாட்டில் பேருரை நிகழ்த்துகிறார்



டாக்டர் வை. இரத்தினசபாபதி

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார் இவ்வாண்டு எடுக்கும் அனைத்திலங்கைச் சைவப்பெரும் மாநாட்டில் கலந்து தலைமைதாங்கிப் பேருரைகள் நிகழ்த்தத் தமிழ்நாட்டிலிருந்து வருகைபுரியும் பேராசிரியர் சைவத் திரு வை. இரத்தினசபாபதி எம். ஏ. பி எச் டி. அவர்கள் சைவமரபில் ஞானகுரு சீடபரம்பரையில் வந்த ஒரு பேரறிஞராவார்

1929ஆம் ஆண்டு பிறந்த இவர் தமிழ்நாட்டிலும் பிற இடங்களிலும் சைவசித்தாந்தத்தை பலவகையிலும் போற்றிவளர்த்துவரும் சென்னைச் சைவசித்தாந்த மகா சமாஜத்தை 1909 ஆம் ஆண்டில் தோற்றுவித்த திருப்பாதிருப்புலியூர் ஞானியார் சுவாமிகளிடம் ஏடெழுதத் தொடங்கி, நல்லாசிபெற்று, அவர்தம் தொடக்கப்பள்ளியில் கல்வி பயின்றவர். அக்காலத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் எழுதிய பாலபாடங்கள், சைவ வினாவிடைகள் முதலிய நூல்களைக்கற்று நாவலர்பெருமான்பால் அளவிறந்தபத்தி பூண்டு, தமிழையும் சைவத்தையும் ஆர்வமோடு பயின்றுவந்தார்.

நால்வர் நான்மணிமாலை திருப்பூவணநாதருலா முதலாய நூல்களுக்கு உரைகண்ட இவர் சிறந்த உரையாசிரியர், நூலாசிரியர் மொழிபெயர்ப்பு ஆசிரியருமாவார். இவர் எழுதி வெளியிட்ட கட்டுரைகள் மிகப்பல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழக சட்டசபையில்
# இ.காங்கிரஸ் தி. மு. க.வுடன் சேர்ந்து அமராது
## இந்திராவைச் சந்தித்த பின் சுப்பிரமணியம் தகவல்

சென்னை, ஜூன் 5

தமிழக சட்ட சபைத்தேர்தலில் தி மு க வுடன் கூட்டாகப் போட்டியிட்ட இந்திரா காங்கிரஸ் சட்ட சபையில் தி மு க வுடன் சேர்ந்து எதிர்க்கட்சி ஆசனங்களில் அமர மாட்டாது.

இவ்வாறு தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. எம் பி சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

தமிழ் நாட்டின் அரசியல் நிலைகுறித்தும் நடந்து முடிந்த தேர்தல் பற்றியும் கட்சியின் தலைவியும் பிரதமருமான திருமதி இந்திரா காந்தியுடன் பேச்சு நடத்திய பின் பத்திரிகை நிருபர்கள் மத்தியில் உரையாற்றுகையில் திரு. சுப்பிரமணியம் மேற்கண்டவாறு கூறினார்.

சட்டசபையில் தி மு க வுடன் கூட்டாக உட்காருமா என பத்திரிகை நிருபர் கேட்ட போது திரு சுப்பிரமணியம் மேலும் கூறியதாவது

சட்டசபையில் இந்திரா காங்கிரஸ்கட்சி தனியாக அமர்ந்து பயனுள்ள எதிர்க்கட்சியாக இயங்கி வரும். (இ)

## தமிழக சட்டசபையிகள் 77 விவசாயில்

சென்னை, ஜூன் 5

தமிழக சட்டசபையின் 234 புதிய உறுப்பினர்களில் 77 முழு நேர விவசாயிகளும் 57 சமூக அரசியல் தொண்டர்களும் 44 வழக்கறிஞர்களும் அடங்குவர்.

29 தொழிலதிபர்கள், 9 தொழிற்சங்க வாதிகள், 8 கல்விமான்கள், 5 பத்திரிகையாளர்கள், 5 கலைஞர்களும் இவர்களுள் அடங்குவர். (இ)

## சராசரி வயது 44

(சென்னை)

தமிழக சட்டசபையின் புதிய உறுப்பினர்களின் சராசரி வயது 44 ஆகும்.

13 பேர் 30 வயதுக்கு குறைந்தவர்கள். (இ)

## கலைக்கப்பட்ட தமிழக சட்டசபையில்...

(சென்னை)

இவ்வாண்டு பெப்ரவரி மாதம் கலைக்கப்பட்ட தமிழக சட்டசபையிலிருந்த கட்சிகளின் ஆசனங்கள் வருமாறு:

அ தி மு க 12?, தி மு க 47 இந்திரா காங்கிரஸ் 27, இடது கம்யூ 12, ஜனதா 7, வலது கம்யூ 5, இந்திய பார்வர்டு பிளக் 2, தமிழ்நாடு உழைப்பாளர் முன்னேற்றக்கட்சி 2, முஸ்லிம்லீக் 1, பார்வர்டுபிளக் 1, சுயேச்சை 1, சபாநாயகர் 1, காலி இடங்கள் 2. (2)

## 28 வருடமாக 18 மைல் தூரம் நகர்ந்த தபால் அட்டை

ரோம், ஜூன் 5

தலைமை ஆசிரியர் ஒருவர் 1956ம் ஆண்டு 18 மைல் தூரத்தில் உள்ள தமது மருகனுக்கு தபால் பெட்டியில் சேர்த்த தபால் அட்டை ஒன்று 28 ஆண்டுகளுக்கு அதாவது தலைமை ஆசிரியர் இறந்த ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர் நேற்று உரிய விலாசதாரரிடம் கிடைத்துள்ளது.

திரு. லூஜி ஹாலோ என்ற தலைமை ஆசிரியர் 1956-ம் ஆண்டு ஜூன் மாதம் 22-ம் திகதி மேற்குறிப்பிட்ட தபால் அட்டை தபாலில் சேர்க்கப்பட்டதாம். (இ)

## கூட்டம் ஊர்வலம் நடத்த சென்னையில் தடை

[சென்னை]

தமிழக சட்டசபையில் அ தி மு க. அமைச்சரவை நாடாட்சிமை பதவி ஏற்பதல் காரணமாக சென்னை நகரில் கூட்டம் ஊர்வலங்கள் நடத்த இம்மாதம் 15-ம் திகதி வரை தடைவிதிக்கப்பட்டுள்ளது.

# சிறந்த பணியாளருக்கு உயர்ந்த பதவி

இலங்கை வங்கியின் வடபிராந்திய முகாமையாளராக பணியாற்றி வந்த திரு. எம். ஜே. ஏ. ஜெயநாதன் பி ஏ. (சிறப்பு-லண்டன்) இப்பொழுது இலங்கை வங்கியின் உதவிப் பொது முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

ஆசிரியாராக சிறிது காலம் பணி புரிந்தபின் வங்கிச்சேவையில் சேர்ந்து கொண்ட திரு. ஜெயநாதன் இலங்கை வங்கியில் இப்பொழுது ஏறத்தாழ 25 ஆண்டுகள் பணிபுரிந்துள்ளார்.

பதவி உயர்வுடன் கொழும்புக்கு மாற்றலாகிச் செல்லும் திரு ஜெயநாதன் வடபகுதி மாவட்டக் காரியாலயங்களுக்கும் மேலாளராகவிருப்பார்.

வடபிராந்திய முகாமையாளராக அவர் நான்கு ஆண்டுகளுக்குமேல் பணிபுரிந்துள்ளார். இந்தக் காலத்தில் வடபிராந்தியம் பல விதங்களில் பயன் அடைந்தது. இவரது அனுபவமும் நிபுணத்துவ அறிவும் இலங்கை வங்கிக் கிளைகளுக்கூடாக வடபிராந்தியத்திற்கு பலவகைகளிலும் பயன்பட்டுள்ளது என்றால் மிகையல்ல. இவரால் உருவாக்கப்பட்ட பல திட்டங்கள் இப்பிராந்தியத்தில் செயல் படுத்தப்பட்டு பல சிறு வணிகர்களும் சிறு தொழில் அதிபர்களும் மற்றவர்களும் பெரும் பயன் அடைந்துள்ளார்கள்.

கடந்த பெப்ரவரி 28-ம் திகதி இலங்கை வங்கியின் வடபிராந்திய கிளையில் சர்வதேசப்பிரிவு ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. வடபிராந்திய முகாமையாளர் என்ற முறையில் அவர் யாழ்ப்பாணத்தில் பணிபுரிந்த கடைசித்தினமான அன்று இப்பகுதியில் அவரது சேவையின் உச்சக்கட்டசாதனையாக இதனை நிகழ்த்தினார் என்று சொல்வது பொருத்தமாகவிருக்கும்.



வட இலங்கை தொழிலதிபர்களின் 'சேம்பர்' ஒன்றை உருவாக்கும் விதத்தில் கடந்த டிசம்பர் மாதம் வடபகுதி தொழிலதிபர்களின் சந்திப்பு ஒன்று நிகழ்வதற்கும் அதற்கான வழிகாட்டல் குழுவொன்று நிறுவப்படுவதற்கும் இவரே முன் முயற்சி எடுத்தார் என்பதையும் இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமாய் இருக்கும். இதுபற்றிய கடிதங்கள் இப்பொழுது தொழில் நிறுவனங்கள் பதிவாளரின் கவனத்துக்குச் சமர்ப்பிக்கப் பட்டுள்ளன.

திரு. ஜெயநாதன் சிறந்த பேச்சாளருமாவார். பொது சேவை ஸ்தாபனங்களிலும் பொது மக்கள் மத்தியிலும் அவருக்கு நல்ல மதிப்பு இருந்து வருகின்றது. வடபகுதி லயன்ஸ் கழகத்தின் இன்றைய உயர் நிலைக்கு இவரது கடும் உழைப்பும் காரணம் என்று சொல்லலாம். நட்டில் குறிப்பாக யாழ் லயன்ஸ் கழகத்தின் சிறந்த வழிகாட்டியாக அவர் இப்பொழுதும் இருந்து வருகின்றார்.

யாழ். லயன்ஸ் கழகத்தின் தலைவராகவும் அவர் பதவி வகித்துள்ளார். இந்தக்காலத்தில் வலதுகுறைந்தவர்களுக்கு, அங்கவீனர்களுக்கும் உதவும்முகமாக "உதவும் கரங்கள்" திட்டத்தை ஆரம்பித்தார். இது யாழ்ப்பாணக் கழகங்களின் பாராட்டைப் பெற்றது மாத்திரமின்றி கழகத்தின் அனைத்துலகத் தலைவரின் விருதையும் வென்றெடுத்தது. இது படிப்படியாக வளர்ந்து கடந்த மார்ச் மாதம் வலது குறைந்தவர்களுக்கும் அங்கவீனர்களுக்குமான இல்லம் ஒன்றை யாழ் லயன்ஸ் கழகம் ஆரம்பிக்கும் அளவுக்கு உதவியுள்ளது. இதற்கு அவரே பின்னணியில் இருந்துள்ளார். இத்திட்டத்தின் மூலம் வலது குறைந்த 30 பேருக்கு மூச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

திரு ஜெயநாதன் லயன்ஸ் கழகத்தின் மாவட்ட தலைவராகவும், வலயத்தலைவராகவும், பிரதிமாவட்ட ஆளுநராகவும் பணிபுரிந்துள்ளார். இத்துறையில் திரு. ஜெயநாதன் நேர்மையாகவும் மனப்பூர்வமாகவும் ஆற்றியுள்ள சேவைகள் பாராட்டுக்குரியவை.

'வேணு'

# தேசிய எதிர்ப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முடித்தனர்.

கல்வித் திணைக்கள ஊழியர்கள் தமது ஊர்வலத்தைக் கல்வித் திணைக்கள வாசலிலிருந்து ஆரம்பித்து முத்திரைச்சந்தை பருத்தித்துறைச் சந்திவரை சென்று திரும்பவும் கல்விக்கந்தோர்வரை ஊர்வலமாகச் சென்றனர். ஊர்வலத்தில் சென்றவர்கள் எல்லோரும் கறுப்புப்பட்டி அணிந்து சுலோக அட்டைகளைத் தாங்கிச் சென்றனர்.

### யாழ். பல் கலைக்கழக மாணவர் மறியல்

யாழ். பல்கலைக்கழகத்தில் ஐநூறுக்கும் அதிகமான மாணவ மாணவிகள் மறியல் போராட்டம் நடத்தினர்.

நண்பகல் 12 மணி முதல் 1 மணி வரை இப்போராட்டம் நடைபெற்றதால் பல்கலைக்கழக விரிவுரையாளர்களோ அன்றி வேறு ஊழியர்களோ பல்கலைக்கழகத்திற்கு உள்ளே வரவோ வெளியே செல்லவோ முடியாத நிலையேற்பட்டது.

போராட்டத்தில் கூடுதலாக மாணவிகளே ஈடுபட்டிருந்தமைக் காணக்கூடியதாக இருந்தது. சகலரும் கறுப்புப் பட்டி அணிந்து காணப்பட்டனர். சில மாணவர்களின் கைகளில் சுலோக அட்டைகளும் காணப்பட்டன. ஒவ்வொருவரும் அரசு எதிர்ப்புக் கோஷங்களைக் கோஷித்தவண்ணம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பல்கலைக்கழகத்திற்கு அருகாமையிலுள்ள ரயில்பாதையின் வீதியின் நடுவே கறுப்புக் கொடியொன்றும் பறக்கவிடப்பட்டிருந்தது.

### ஆசிரியர்களின் அமைதியான

[illegible]

500க்கும் அதிகமான ஆசிரியர்கள் நேற்றுப் பிற்பகல் சுலோக அட்டைகளைத் தாங்கி இயவண்ணம் அமைதியான போராட்டத்தை மேற்கொண்டனர்.

யாழ் கல்வித் திணைக்கள வளவில் நடைபெற்ற இப்போராட்டத்தில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கைத் தேசிய ஆசிரியர் சங்கம், பொதுச் சேவைத் தொழிலாளர் சங்கம் ஆகியவற்றைச் சேர்ந்த ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

### நகர முதல்வரும் மறியலில் பங்குபற்றினர்

யாழ் நகர மண்டபத்தில் நேற்றுக் காலை நடந்த ஊழியரின் மறியல் இயக்கத்தில் நகர முதல்வர் திரு. இராசா விசுவநாதன், உதவி மேயர் திரு. பி.எவ்.சேவியர் மற்றும் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

நேற்று நண்பகல் 12 மணி முதல் 12-30 வரை மீண்டும் நகரமண்டப வளவில் உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத்தினர் மறியல்செய்தனர்.

நகர மண்டப வளவிற்கு வெளியில் பொலிசார் கடமையாற்றினர்.

### வீரசிங்கம் மண்டபம் முன்

யாழ் வீரசிங்கம் மண்டபத்திலுள்ள அரசுக் காரியாலயங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் நேற்று நண்பகல் 12 மணி முதல் 12-30 மணி வரை சுலோகஅட்டைகளுடன் கறுப்புப் பட்டி அணிந்து மறியல் செய்தனர்.

நண்பகல் 12 மணிக்குச் சுலோக அட்டைகளுடன் ஊழியர்கள் வீதிக்குச் சென்றபோது அங்கு கடமையாற்றிக்கொண்டிருந்த 2 பொலிசார் அவர்களை வீதியோரத்தில் கூட்டமாக நிற்கவேண்டாமென்றனர்.

உடனே ஊழியர்கள் வீரசிங்கம்மண்டப வளவிற்குள் வந்து மதில்கப்பிகளுக்கு வே நின்று மறியல்செய்தபின் நண்பகல் 12-30 மணிக்குக் கலைந்துசென்றனர்.

### நகர சுத்தித் தொழிலாளர்

முந்நூறுக்கும் மேற்பட்ட நகரசுத்தித் தொழிலாளர்கள் நேற்று வேலைசெய்யாது தமது எதிர்ப்பை அரசுக்குத் தெரிவித்தனர்.

### கைதாகி விடுதலை

துண்டுப் பிரசுரங்களை விநியோகித்த இளைஞர்கள் இருவர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு விடுதலைசெய்யப்பட்டனர்.

இளைஞர் பேரவையைச் சேர்ந்த இருவர் நேற்று யாழ். நகரில் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்துக் கொண்டிருக்கையிலேயே பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தைச் சேர்ந்த 'ஈழநாடு' பத்திரிகைக் காரியாலய ஊழியர்களும் நேற்று முழு நாளும் கறுப்புப்பட்டி அணிந்து வேலையில் ஈடுபட்டுக் கொண்டனர்.

### கருட்டுத் தொழிலாளர்

இலங்கைச் சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த 12 ஆயிரத்துக்கும் அதிகமான 365 சுருட்டுத் தொழிற்சாலைகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்கட்சியின் கொள்கையை முன்வைத்து நேற்றுத் தேசிய எதிர்ப்புத் தினத்தை அனுஷ்டித்தனர். இவர்களில் ஒருவராவது வேலைக்குச் செல்லவில்லையெனச் சங்கத் தலைவர் திரு. இ. க. முதலியார் தெரிவித்தார்.

(தொடரும்)

வைத்திலிங்கம்ஸ்

∵ உறுதியானதும்
∵ நீடித்து உழைப்பதும்
∵ தன்னிகரற்றதுமான
'றிவர்' பிராண்ட்
கல்வனைஸ்ட் இரும்புத் தகடுகள்

பிரதான விநியோகஸ்தர்களும் இரும்புப் பொருட்கள் விற்பனையாளர்களும்

என். வைத்திலிங்கம் நிறுவனத்தார்
450, பழைய சோனக தெரு, கொழும்பு - 12
தொலைபேசி: 33143-4
கிளை: 138, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 530

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிநயசூடாமணி பத்மா அளிக்கும் நாட்டிய நிகழ்ச்சி



புகழ்பெற்ற நாட்டிய தாரகை அபிநய சூடாமணி பத்மா இராமநாதனும் செல்வி இராசரா சசுவாயும் இணைந்து நடன நிகழ்ச்சி ஒன்றினை வெள்ளிக்கிழமை மாலை யாழ் வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் அளிக்கிறார்கள்.

பரதம், குச்சுப்புடி, மோகினி நடனம், கதகளி நடனம் போன்ற நிகழ்ச்சிகளை அவர்கள் இன்று அளிப்பார்கள்.

சுடர்கொடி பத்மா ராமநாதன், சிறந்த பரதநாட்டிய வித்தகராய் இருந்த போதிலும் ஏனைய இந்திய நாட்டிய முறைகளையும் நன்கு பயின்றவர். உலகின் பல நாடுகளுக்கும் சென்று நிகழ்ச்சிகளை நடத்தியுள்ள இவருக்கு அமெரிக்காவின் நியூயோர்க் தமிழ்ச் சங்கம் 'அபிநய சூடாமணி' என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்துள்ளது.

சென்னையில் பத்மாலயா நடன நிலையம் என்ற பெயரில் நடன பயிற்சி நிலையம் ஒன்றை இவர் நடத்தி வருகின்றார். இந்த ஸ்தாபனத்துக்கு நடிகர்திலகம் சிவாஜி கணேசன் போஷகராக இருந்து வருகின்றார்.

இன்று நடைபெறும் நடன நிகழ்ச்சிகளை பல்வைத்திய கலாநிதி பா. சோ. பாரதி தம்பதிகளும் வைத்திய கலாநிதி பொ. சிறிரங்கநாதன் தம்பதிகளும் ஏற்பாடு செய்துள்ளனர்.

# "தேர்தல் ஒத்திவைப்பு: விவசாயிகளுக்கு நஷ்டம்"

(யாழ்ப்பாணம்)

"விவசாயப் பிரதிநிதிகள் தேர்தல்கள் போதியளவு விவசாயிகள் பங்குபற்றுததினால் கோரமின்றி ஒத்திவைக்கப்பட்டு வருகின்றன இதனால் விவசாயிகள் தங்கள் உரிமைகளைத் தாங்களாகவே இழக்கின்றனர். விவசாயிகளின் கவனயீனத்தால் அவர்களுக்கே அதிகம் நஷ்டம் ஏற்படுகிறது"

இவ்வாறு நல்லூர் கமநல சேவைப் பெரும்பாக உத்தியோகத்தர் செல்வி அஞ்சனா ராஜதுரை கமநலசேவைக் குழுத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டு வருவது தொடர்பாக எமது நிருபருக்கு அளித்த பேட்டியில் கூறினர். அவர் கூறியதாவது:

"கமநலசேவைக் குழுக்களே எதிர்காலத்தில் ஒவ்வொரு விவசாய இடப்பரப்பினதும் நிர்வாகத்தைக்கொண்டு நடாத்தப்போகிறது இதற்கான அதன் உறுப்பினர்களுக்கு ஒவ்வொரு கூட்ட அமர்வுக்கும் இருபத்தைந்து ரூபாவும் வழங்கப்படவுள்ளது. ஆனால் ஒவ்வொரு விவசாய இடப்பரப்பிலும் உள்ள கமக்காரர் இடாப்பில் பெயர் பதிவுடையோரில் நாலில் ஒரு பகுதியினராவது கூட்டத்திற்கு வந்தால் மட்டுமே இக்குழுவுக்கான தெரிவுக்கூட்டத்தை நடாத்தலாம்.

## நல்லூரில் இரண்டாவது தேர்தல்

நல்லூர் கமநல சேவைக்குழுவுக்கான தேர்தல் இரண்டாம் முறையாக ஏழாம் திகதி ஆரம்பமாகவுள்ளது. ஏழாம் திகதி காலை திருநெல்வேலி கல்வியங்காடு பகுதிகளுக்கான தேர்தல் தேணியடி சன சமூக நிலையத்தில் பயிர்ச்செய்கை அலுவலர் திரு. நித்தியானந்தராஜாவால் நடாத்தப்படவுள்ளது. மறுநாள் எட்டாம் திகதி மிகப்பெரிய விவசாயப் பிரதேசமென கூறப்படும் அரியாலை கிழக்குக்கான தேர்தல் பொன்னம்பலம் வீதியிலுள்ள கலைவாணிப் படிப்பகத்தில் காலை ஒன்பது மணிக்கு பயிர்ச்செய்கை அலுவலர்கள் ஆ. அ. கதிர்காமநாதன், சு. யோ பற்றிமாகரன் ஆகியோரால் நடாத்தப்படவுள்ளது. திங்கட்கிழமை ஒன்பதாம் திகதி நல்லூர் அரியாலை மேற்கு பகுதிகளுக்கான தேர்தல் நல்லூர் கமநலசேவை நிலையத்தில் இடம்பெறவுள்ளது. (கி-இ)

## இன்று பரிசளிப்பு விழா

(அரியாலை)

யாழ் பரியோவான் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை கல்லூரியின் பீற்றோ ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

யாழ்ப்பாண ஆர்ச் டீக்கன் அருட்திரு சாம் டி ஹோர்சிங்டன் அடிகளார் தலைமையில் நடைபெறும். இவ்விழாவில் பிரதம அதிதியாக உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. சி. வாமதேவன் கலந்துகொள்ளுவார்.

கல்லூரி அதிபர் சி. ஈ. ஆனந்தராசா கல்லூரியின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பிப்பார். திருமதி வாமதேவன் மாணவர்களுக்கான பரிசில்களை வழங்குவார். (அ)

## சித்திரத் தேர்

(மாவிட்டபுரம்)

மயிலிட்டி குளையல் வளவு முருகன் கோவிலுக்கு சுமார் 3 லட்சம்ரூபா செலவில் புதியசித்திரத்தேர் அமைக்கப்பட்டுவருகிறது.

இக் கோவிலில் தேர் இல்லாத குறையைப் போக்க பொதுமக்கள் ஒன்றிணைந்து இத்தேர்த்திருப்பணி வேலைகளை மேற்கொண்டுள்ளனர்.

மயிலிட்டியைச் சேர்ந்த சிற்ப ஆசாரியார் சி. தவரத்தினம் தலைமையில் சிற்பக் கலைஞர்கள் நவீன வேலைப்பாடுகளுடன் கூடியதாக இத்தேரை அமைத்து வருகின்றனர்.

எதிர்வரும் ஆடிமாதத்தில் இப்புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டத்திற்கு [illegible] உள்ளது.

# மன்னாரில் பிற மீனவர் குடியேற்றம் அதிகரிப்பு

## எதிர்க்கட்சித்தலைவர் வியப்பு

(மன்னார்)

"இப் பகுதி சில வருடங்களுக்கு முன் இருந்ததை விட இப்போது நிலைமை பெருமளவு மாறியுள்ளது. இங்கு பிற ஊர் மீனவர்களின் குடியேற்றம் இப்பொழுது அதிகரித்துள்ளது. இதைக்காண வியப்பாக இருக்கிறது.

இவ்வாறு தலைமன்னார் புனித லோறன்ஸ் வித்தியாலயத்தில் வணபிதா. பி. அலோசியஸ் தலைமையில் நடைபெற்ற மீனவர் பிரச்சனை தொடர்பான கருத்தரங்கில், காங்கேசன்துறை எம்பியும் எதிர்க்கட்சித்தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார். இக் கருத்தரங்கில் மன்னார் எம்.பி. திரு. பி. எஸ் சூசைதாசன் பாடசாலை அதிபர் திரு. எஸ். செபஸ்தியான் குலாஸ், திரு. யா. தோமாஸ் மிராண்டா உட்பட பலர் உரையாற்றினர்.

கருத்தரங்கிற்குமுன் எதிர்க்கட்சித்தலைவர் திரு. அமிர்தலிங்கமும், மன்னார் எம். பி. திரு பி. எஸ். சூசைதாசனும் தலைமன்னார் மேற்கு கெனடி வீதிச் சந்தியிலிருந்து அழைத்துச் செல்லப்பட்டனர்.

திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில் "நாம் இந்தநாட்டில் சிறுபான்மையினராக வாழும் வரைபிற ஊர் மீனவர்களின் குடியேற்றம் நடைபெறத்தான் செய்யும் இதை அறிந்து தான் குடியேற்றங்களை நிறுத்தும்படி அமரர் எஸ் ஜே. வி. செல்வநாயகம் முன்னாள் அமரர் எஸ் டபிள்யு ஆர் டி. பண்டாரநாயக்காவுடன் ஒப்பந்தம் செய்திருந்தார். ஆனால் பெரும்பான்மை இனத்தவரின் செல்வாக்கைப் பயன் படுத்தி அந்த ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது. இதனைத் தொடர்ந்து தான் எமது சொந்த மண்ணில் சிறுபான்மையினராக இருப்பதை நாம் எதிர்த்துப் போராடி வருகிறோம்.

இன்றைய நிலைமையில் இந்தப்பகுதியில் இந்த ஊர் மீனவர்களை விட பிற ஊர் மீனவர்களே அதிகமாகக் காணப்படுகின்றனர் இதனை நிறுத்தும் ஆட்சியாளராக இருந்தால் தமிழ் மக்களாகிய நீங்கள் ஒரு கிட்டியிருக்கும் ஆணையிலிருந்து நான் சிறிதளவேனும் அலைவில்லை உங்களது பிரச்சனை நீங்க உடனடியாக நடவடிக்கை எடுப்பேன்.

இலங்கை சுதந்திரம் அடைந்து 32 வருடங்களாகியுள்ளன. அதனால் வடக்கு, கிழக்கு மாகாணங்களை விட மற்ற மாகாணங்கள் பெருமளவு முன்னேற்றம் அடைந்துள்ளன. இதுபோதாதென்று தென்னிலங்கை மாவட்டங்களையும் அபிவிருத்தி செய்யவென ஒவ்வொரு நாட்டிடமும் இந்த அரசு பொறுப்புக் கொடுத்துள்ளது ஆனால் வடக்கு, கிழக்கு பகுதிகளை அபிவிருத்தி செய்ய எந்த ஒருநாட்டிடமும் பொறுப்புக் கொடுக்கவில்லை. இதைப்பற்றி பாராளுமன்றத்தில் நான்கேட்டபோது இப்பொழுதுதான் வெளிநாடுகளின் உதவிகளைக் கோரியிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். தமிழ் மக்களாகிய நாம் ஒற்றுமையாக இணைந்து வாழாவிட்டால் பலநெருக்கடிகளின் மத்தியிலேயே வாழநேரிடும். மற்றவர்கள் சுதந்திரம் பெற்றாலும், இணைந்து வாழ்ந்தால் நாமும் இணைந்துவாழ்வோம்.

நமது இந்த ஒற்றுமையைக் குலைக்கவென இப்போது சில முயற்சிகள் தோன்றியுள்ளன. இதில் சிக்கி பலியாகி விடாமல் ஒற்றுமையாக வாழ்வோம் என்றார்". (ச)

## வருகின்றனர்

(மட்டக்களப்பு)

தமிழர் விடுதலைக்கூட்டணியில் நீக்கம் செய்யப்பட்ட கோவை மகேசன், ஈழவேந்தன் ஆகியோர் இம்மாதம் இறுதியில் மட்டக்களப்பின் பல பகுதிகளுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் இன்றைய போக்கு குறித்துப்பேச வாரிகள்ளன அறியப்படுகிறது.

## தற்காலிக வேலைநீக்கம்

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மின்தறி ஆலையில் வேலியே பயிரை மேய்ந்ததாகக் கூறப்படும்சம்பவம் ஒன்றுதொடர்பாகமின்தறி ஆலை களஞ்சியப் பொறுப்பாளர் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க மின்தறி ஆலையில் களஞ்சியப் பொறுப்பாளராகக்கடமை புரிந்த ஒருவர் கடமைநேரத்தில் தமது ஸ்கூட்டரில் சுமார் 300 ரூபா பெறுமதியான நூல் பொதி யொன்றை மறைத்து வைத்துக்கொண்டு ஆலையிலிருந்து வெளியே சென்றதாகவும், இதுபற்றித் தகவலறிந்து அங்குவிரைந்த சங்கப் பொது முகாமையாளர் திரு. சி. தவரத்தினம் அவரைப்பிடித்துக் கொண்டதாகவும் இச்சம்பவம் பற்றிக் கூறப்படுகிறது.

மேற்படி களஞ்சியப் பொறுப்பாளரைச் சங்க நிர்வாகம் தற்காலிக வேலை [illegible] பட்டுள்ளது. (அ)

# சிறந்த பஸ் நடத்துநர் சாரதி தெரிவுப் போட்டி-80

கடமை, கண்ணியம் கட்டுப்பாடு ஆகிய நற்பண்பு கொண்ட பஸ் நடத்துநர்களும் ஒழுக்கம், கவனம் திறமை ஆகிய நற்பண்புகளை பஸ் சாரதிகளிடமும் வளர்க்கும் வண்ணம் யாழ் ரோட்டறிக் கழகம்

"சிறந்த நடத்துநர், சிறந்த சாரதி"

போட்டியை

இலங்கை வடபிராந்திய போக்குவரத்துச்சேவையுடனும் "ஈழநாடு" பத்திரிகையுடனும் இணைந்து நடாத்த எண்ணியுள்ளது. இம்முறை வடமாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், காரைநகர், பருத்தித்துறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய ஏழு டிப்போக்களையும் உள்ளடக்கிப் போட்டி நடாத்தப்படுகிறது.

இந்த டிப்போக்களிலிருந்து சேவைபுரியும் பஸ் வண்டிகளில் கடமையாற்றும் சிறந்த சாரதிகளையும் நடத்துநரையும் தெரிவு செய்ய உதவும் வண்ணம் "ஈழநாடு" பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் கூப்பன்களை நிரப்பி அனுப்பும் படி யாழ். ரோட்டறிக் கழகம் பஸ் பிரயாணிகளைக் கோருகிறது.

## ✯ சிறந்த பஸ் நடத்துநர் சாரதி தெரிவுப் போட்டி கூப்பன் அனுப்பும் அதிர்ஷ்டசாலிகளுக்கும் அரிய மூன்று பரிசுகள்!

விரையுங்கள்!!

1-வது பரிசு ரூபா 500-00

2-வது பரிசு ரூபா 250-00

3-வது பரிசு ரூபா 100-00

முடிவு திகதி 10-6-1980

கீழே தரப்படும் கூப்பனைக் கத்தரித்து நிரப்பி அனுப்பவேண்டிய முகவரி:

ரோட்டேறியன் பல்வைத்தியகலாநிதி
பா. சோ. பாரதி
தலைவர் - தொழிற்சேவைப் பகுதி
பல் வைத்திய நிலையம்,
566 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

சிறந்த பஸ் நடத்துநர்-சாரதி தெரிவுப் போட்டிக் கூப்பன்

சிறந்த நடத்துநர் பெயர் ............ சிறந்த சாரதி பெயர் ............

டிப்போ :- யாழ்ப்பாணம்-காரைநகர்-பருத்தித்துறை-கிளிநொச்சி-முல்லைத்தீவு-மன்னார்-வவுனியா

(நீங்கள் தெரிவுசெய்யப்பட்டவர் கடமையாற்றும் டிப்போவின் கீழ் கீறிடுக)

பஸ் செல்லும் வழி இலக்கம் (Route No..............)

அனுப்புபவர் பெயர்............................ஒப்பம்...........

விலாசம்.............................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோவியத்தின் மூன்றில் இரண்டு

# ஏவுகணைகள் மேற்கு ஐரோப்பாவை நோக்கி வைக்கப்பட்டுள்ளன

## அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் தகவல்

லண்டன், ஜூன் 5

சோவியத்யூனியனில மேற்கு ஐரோப்பாவை நோக்கி வைக்கப்பட்டுள்ளன என அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் திரு. பிரௌன் வெளியிட்டுள்ளார்.

சோவியத்யூனியன் வசமுள்ள ஏவுகணைகளில் மூன்றில் இரண்டு பங்கு மேற்கு ஐரோப்பாவை நோக்கியும் மிகுதி சீனாவை நோக்கியும் வைக்கப்பட்டுள்ளன என்றும் திரு பிரௌன் கூறினார்.

பல மாதங்களுக்கு ஒரு தடவை ஏவுகணைகளை உற்பத்தி செய்துவந்த சோவியத்யூனியன் தற்போது 5 நாட்களுக்கு ஒரு ஏவுகணையைத் தயாரித்துவருகிறது என்றும் அவர் கூறினார். (இ)

---

# தமிழக தேர்தல்: 7 பேர் பலி!

(சென்னை)

தமிழகத் தேர்தல் வரலாற்றில் இதுவரையில் எந்த தேர்தலின்போதும் கண்டிராத அளவுக்கு தேர்தல் கலவரங்கள், மோதல்கள் காரணமாக நடந்துமுடிந்த சட்டசபைத் தேர்தலில் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேர்மையாகவும் அமைதியாகவும் பாரபட்சம் இன்றியும் தேர்தல் நடைபெற்று, வாக்குச்சீட்டுகளின் மூலம் ஆட்சிமாற்றம் கண்ட தமிழகம் என்ற நற்பெயர் தமிழகத்திற்கு இதுவரை இருந்துவந்தது.

ஆனால் இந்த சட்டப்பேரவைத் தேர்தலின்போது ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்கள், தேர்தல் பிரச்சார

[7-ம் பக்கம் பார்க்க]

---

# கடத்தல் விமான பணயக்கைதிக்கு $2\frac{1}{2}$ லட்சம் ரூபா நஷ்டஈடு

நியூயோர்க், ஜூன் 5

1976ம் ஆண்டு பயங்கரவாதிகளால் கடத்தப்பட்ட விமானத்தில் பணயக்கைதியாக வைக்கப்பட்டிருந்த ஒருவருக்கு 'ஏர்-பிரான்ஸ்' கம்பனி 2 லட்சத்து 80 ஆயிரம் ரூபாவை நஷ்டஈடாக வழங்கியுள்ளது.

1976ம் ஆண்டு ஏதன்ஸ் விமானநிலையத்தில் பயங்கரவாதிகளால் கடத்தப்பட்ட உகண்டா என்டபே விமானநிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த விமானத்தில் பணயம் வைக்கப்பட்டிருந்த பிரயாணிகளில் ஒருவரான 44 வயதான திரு. மூர்ரேஸ்வார்ட்ஸ் என்பவருக்கே இந்த நஷ்டஈடு வழங்கப்பட்டது.

குறிப்பிட்ட விமானக் கம்பனி நஷ்டஈட்டுத் தொகையை வழங்க முன்வந்ததையடுத்து அமெரிக்க நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த நஷ்டஈடு மனுவை திரு. ஸ்வார்ட்ஸ் வாபஸ் பெற்றுக்கொண்டார். (இ)

---

## அலங்காரத்திருவிழா

(யாழ்ப்பாணம்)

நீராவியடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய அலங்காரத் திருவிழா இம் மாதம் 14 ம் திகதி வரை நடைபெறும்.

தினமும் இரவு 'சிவனருட் செல்வர்' என்னும் பொருள் பற்றி பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மா பக்கவாத்திய சகிதம் தொடர் விரிவுரை நிகழ்த்துவார். (இ)

---

நெருக்கடி நிலை அத்துமீறிய செயல்

# இந்திரா உட்பட 14 பேருக்கு எதிரான வழக்குகள் தள்ளுபடி

## குற்றச்சாட்டுக்களுக்கு ஆதாரமில்லையாம்

புதுடில்லி, ஜூன் 5

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்திக்கும் மற்றும் 14 பேருக்கும் எதிராக நெருக்கடிநிலை அமுலிலிருந்தபோது சிலரைச் சட்டத்துக்குவிரோதமாக கைதுசெய்ய நடவடிக்கை எடுத்ததாக குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்குகள் தள்ளுபடிசெய்யப்பட்டன.

திருமதி காந்திக்கும் மற்றவர்களுக்கும் எதிராகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு எதுவித ஆதாரமும் இல்லை என புலனாய்வுத்துறை பொலிசார் தெரிவித்ததை அடுத்து விசேட நீதிமன்ற நீதிபதி திரு. அகர்வால் அவ்வழக்குகளை ரத்துச்செய்தார். (இ)

---





சேர்கோப்பூர்

36% (3, 4, டி. பீ. ஏ. கொண்டது)

சேர்கோப்பூர் 36%, (பட்ட மாத்திரத்திலேயே) சேறுள்ள அல்லது உலர்ந்த நெல் வயலில் உள்ள நெற்சப்பி, கோழிச்சூடன், குதிரைவாற்புல், இடைச்சி, கோரை, மொண்டி ஆகிய சகல களைகளையும் கட்டுப்படுத்தும் வன்மையான களைநாசினி. உச்சப் பயன் பெற, விதைத்து 7-21 நாட்களுள் சேர்கோப்பூர் தெளிக்க வேண்டும். களைகள் 2-3 இலை விட்டிருக்கும் காலத்தில் பாவிப்பதே மிகச் சிறந்தது. சேர்கோப்பூர் 36% பாவித்து நெற்களைகளைக் கட்டுப்படுத்தி விளைச்சலைக்கூட்டி இலாபத்தைப் பெருக்குங்கள்.

தரமான BAYER பாயர் பீடைநாசினிகளைப் பாவியுங்கள்.

இலங்கையில் பாயர் பீடைநாசினிகளின் தயாரிப்போர்
ஹேக்கெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10. தொலைபேசி: 96863, 96881-6.

450 மில்லி லீட்டர் ரூபா 35/-
3·25 லீட்டர்கள் ரூபா 230/-


---

# சரண்சிங்குக்கு எதிராக வழக்கு

## இந்திராவுக்கு எதிராக சாட்சியமளிக்க ஆர். கே. தவனை நெருக்கினாராம்

புதுடில்லி, ஜூன் 5

முன்னாள் இந்தியப் பிரதமர் திரு சரண்சிங்குக்கு எதிராக திருமதி இந்திராகாந்தியின் முன்னாள் உதவியாளர் திரு. ஆர். கே. தவனையும் அவரது கப்பனாரையும் குடும்பத்தினரையும் தொல்லைப்படுத்தி அவமானப்படுத்தியதாக புதுடில்லி பொலிட்டன் நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

திரு. தவனின் தகப்பனார் திரு. எம். ஆர். தவன் தாக்கல் செய்துள்ள அந்த வழக்கில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் வருமாறு:

"77ம் ஆண்டு மார்ச் மாதம் ஜனதா அரசு பதவிக்கு வந்ததும் அப்போது உள்துறை அமைச்சராக இருந்த திரு. சரண்சிங்கின் உத்தரவின்பேரில் எமது வீட்டில் உளவு வேலை பார்க்கப்பட்டது.

திருமதி காந்திக்கு எதிராகச் சாட்சி சொல்லுமாறு திரு. ஆர். கே. தவனை நிர்ப்பந்தப்படுத்தி அவர் மறுத்துவிட்டபோது அவரையும் அவரது குடும்பத்தினரையும் கைது செய்யப்போவதாக திரு. சரண்சிங்கின் உத்தரவின்பேரில் சிலர் பயமுறுத்தினர்". (இ)

---

தமிழ் நாட்டில்

# ஜனதாதோல்விக்கு மாநில தலைவர்களே காரணம்

## அவர்கள் ராஜினமா செய்யவேண்டும் என்கின்றனர் குழுஉறுப்பினர்கள்

சென்னை, ஜூன் 5

"தமிழ் நாட்டில் ஜனதாக் கட்சியின் தோல்விக்குக் காரணமாக இருந்த தலைவர்கள் ஜனதாவின் தமிழ் நாட்டுத் தலைவர்களே. எனவே இவர்கள் உடனடியாக பதவியிலிருந்துவெளியேற வேண்டும்" இவ்வாறு தமிழ்நாடு மாநில ஜனதா கட்சிக்குழு உறுப்பினர்கள் கட்சியின் தலைமைப் பீடத்தைக் கேட்டுள்ளனர்.

ஜனதா கட்சியின் மாநிலத் தலைவர்களான திரு. பா. இராமச்சந்திரன், திரு. எல். வி. லட்சுமணன் ஆகியோர் இம்மாதம் 15ம் திகதிக்கு முன்

[7ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தேமஸ் பிளாஸ்கள்
ஒலிப்பதிவு நாடாக்கள்
கமராக்கள்
இன்னும் பல
பாரத் சென்ரர்
178, நவீன சந்தை,
(புதிய கட்டிடம் உள்பக்கம்)
யாழ்ப்பாணம்.
போன்: 8265

ஈழநாடு 50 சதம் The EELANAADU

## 10 ஊழியர் தற்காலிக இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

தேசிய எதிர்ப்புத் தினத்தை யொட்டி நேற்று நண்பகல் போசன இடைவேளையின் போது மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட வெவ்வேறு தொழிற்சங்கங்களைச் சேர்ந்த பத்து ஊழியர்களுக்கு தற்காலிக வேலைநீக்க நோட்டீஸ் வழங்கப்பட்டதாக சிறீலங்கா தொழிற்சங்கத்தைச் சேர்ந்த திரு. க. ராஜேந்திரன் தெரிவித்தார்.

சுவிஸ்நாட்டுக்கைக்கடிகாரங்கள்
ஓமாக்ஸ்
வண்ணவண்ண டயல்களில்
ஆண்கள் பெண்களுக்கான
மின்னியக்கி — தன்னியக்கி
விசைதிருப்பி — கடிகாரங்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
எம்மிடம் வாங்கலாம்.
வடபகுதி ஓமாக்ஸ் கைக்கடிகார
விற்பனை முகவர்.
காந்தளகம்
213, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

## சைவபரிபாலனசபை மகாநாடு

(இன்றைய நிகழ்ச்சி)

யாழ்ப்பாணம்- சைவபரிபாலன சபையின் அகில இலங்கைச் சைவ மாநாட்டின் இன்றைய நிகழ்ச்சிகாலை 9 மணிக்கு வண்ணை வைத்தீஸ்வரர் கோவில் விசேட ஆராதனையுடன் ஆரம்பமாகின்றது. இதனைத் தொடர்ந்து நண்பகல் 12 30 மணி வரை சபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் பூசை ஆராதனைகள் நடைபெறும்.

மாலை நிகழ்ச்சிகள் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் பிற்பகல் 3-45மணிக்கு ஆரம்பமாகும்.

சென்னைப் பல்கலைக்கழக பேராசிரியர் டாக்டர். வை. இரத்தினசபாபதி அவர்கள் தலைமைப் பேருரை நிகழ்த்துவார்கள்.

பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை, பண்டிதைபொன். பாக்கியம் சி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் ஆகியோர் விரிவுரை நிகழ்த்துவார்.

## 90 வீதமான

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காலை கட்டப்பட்ட கறுப்புக் கொடிகளைப் பொலிசார் அகற்றினர்.

நண்பகல் 12 மணிக்கு கச்சேரியிலிருந்து பெண் ஊழியர் உட்பட இருநூறுக்கு மேற்பட்ட ஊழியர்கள்சுலோக அட்டைகளுடன் கச்சேரி வாசலைத் தாண்டி வீதி ஓரங்களில் நின்றனர். அங்கு கடமையாற்றிக்கொண்டிருந்த நான்கு பொலிஸ் உத்தியோகத்தரில் ஒருவர் "மறியல் செய்வது சட்டவிரோதமென்றும் கலைந்து செல்லுமாறும் கூறினர்.

எதிரேயிருந்த சங்கக் காரியாலயத்திற்கு செல்லப் போவதாக ஊழியர்கள் சொன்னதும் அப்பொலிஸ் உத்தியோகத்தர், ஐந்தபேரும் அங்கு நிற்கமுடியாது பொது இடத்தில் 5 பேருக்கு மேல் நிற்கக்கூடாது என்று கூறி அவர்களை கலைந்து செல்லுமாறு மீண்டும் கூறினர். இதேநேரம் அந்த பொலிஸ் உத்தியோகத்தர் 'வாக்கி டோக்கி" மூலம் நடப்பவற்றை உடனுக்குடன் பொலிஸ் தலைமைப்பீடத்திற்கு அறிவித்துக் கொண்டிருந்தார்.

### மதிலுக்குப்பின்னல் சென்று நின்றனர்

சுலோக அட்டைகளுடன் வீதியோரத்தில் நின்ற ஊழியர்கள் கச்சேரி வளவிற்குள் வந்து மதிலுக்குப் பின்னால் வரிசையாக நின்றனர்.

நண்பகல் 12-20 மணிக்கு மீண்டும் சுலோக அட்டைகளுடன் இருவர் இருவராக வரிசைப்படி வீதிக்குச் சென்றபோது அவர்களைக் கலைந்து செல்லுமாறு பொலிஸ் உத்தியோகத்தர் கூறினர். அவர்கள் தொடர்ந்து கச்சேரி மறுவாசல்வரை முன்னேறிக்கொண்டிருந்தனர். சில நிமிடங்களில் பொலிஸ் ஜீப்பில் பொலிஸார் வந்து இறங்கினர். தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் அவ்விடம் வந்து அவர்களைக் கலைந்து செல்லுமாறு கூறினர். ஊழியர் மீண்டும் கச்சேரி வளவிற்குள் வந்து மதிலுக்குப் பின்னால் நின்றபின் 12-30 மணிக்கு கலைந்து சென்றனர். ஒருவர் கறுப்புச் சேட் அணிந்திருந்தார். (க-கு)

மக்கின்னன் டிரவல் சேர்விஸ்
(இலங்கை) லிமிட்டெட்
உங்களை
திருச்சிராப்பள்ளி, மதுரை, பம்பாய், கோலாலம்பூர், சிங்கப்பூர், பரிஸ், லண்டன்,
துபாய், சவூதி அரேபியா, கனடா ஆகிய நாடுகளுக்கு அழைத்துச் செல்ல
மற்றும்
பாஸ்போட், அமெரிக்கன் டிறவலர்ஸ் செக், உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட்,
சுற்றுலாக்கள் ஆகிய உங்கள் தேவைகளை
கொழும்பு செல்லாமலே யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்துகொள்ள
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
மக்கின்னன் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்.,
தபால் பெட்டி இல: 92
8, மருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8154
பயணம் உங்களது! - சௌகரியமாக்குவது எங்களது!!

## சிங்கப்பூர் சென்றார்


(யாழ்ப்பாணம்)

யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவரான சுதிராஜா தயாஞ்செயன் சிங்கப்பூர் இலங்கை கூட்டு நிறுவனமான 'ஏயர்-லங்கா' வினால் விமான பொறியல் துறையில் பயிற்சி பெறுவதற்காகத் தெரிவு செய்யப்பட்டு சிங்கப்பூருக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

ஒரு வருடம் சிங்கப்பூரிலும் நான்கு வருடங்கள் அமெரிக்காவிலும் இவர் பயிற்சி பெறுவார்.

இவர் மானிப்பாயைச் சேர்ந்த சமாதான நீதவானும் உத்தியோகப்பற்றற்ற நீதவானுமான திரு. கோ சேனாதிராஜாவின் இரண்டாவது புத்திரராவார். (இ)

நீங்கள் வாங்கும் "சுஸுக்கி" ... "SUZUKI" ... மோட்டார் சைக்கிள்களுக்கு
விற்பனை விலையில் விஷேட கழிவு வழங்கப்படுகிறது....
இவ்வரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உங்கள் தேவைகளைப் பெற விரையுங்கள்.........
இச்சலுகை குறிப்பிட்ட சில வாரங்களுக்கு மட்டுமே வழங்கப்படும்
SUZUKI
சுஸுக்கி
SUZUKI




எமது காட்சியறையில் பெற்றுக்கொள்ளலாம்
S. Sinnathurai & Co.
25, Stanley Road - Jaffna.
PHONE: 7357
சின்னத்துரை அன் கொம்பனி
25, ஸ்ரான்லி வீதி, - யாழ்ப்பாணம்.
போன்: 7357

இப்பத்திரிகை ஈழநாடு ... 63-ம் இலக்க ... ஜூன் 6-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a Newspaper at the General Post office Sri Lanka under No. CE/8948/78. The Eelanaadu, Post Box No. 49, Telegrams "Eelanaadu, Phone: 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org